# சிரித்திரன்

ஆனி 1993

Double

பருந்துக்கு விருந்து கொடாதது பயங்கரவாதமா?



யாழ் மாநகராட்சி மன்ற பொது நூலகம்
குருநகர் கிளை நூலகம்

நூலகம்
மாநகராட்சி மன்று
03 - 7 - 1993
யாழ்ப்பாணம்

விலை ரூபா
**15**

★ மரக் கொள்கலன்கள்

★ இரும்பு நிர்மாண வேலைகள்
மற்றும்

★ ஒப்பந்த வேலைத்திட்டங்களின் தொழில் நுட்பவியலாளர்கள்

''உதைபந்தாட்டத்தில் கிடைத்த கிண்ணமா?''
''இல்லை, அவர்கள் ஒப்பந்த வேலைகளுக்காக கிடைக்கும் வெற்றிக் கிண்ணம்.''



# ஹைற்றோ புறடக்ஸ்

## "HYDRO PRODUCTS"

முதலாம் ஒழுங்கை, தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை.

யாழ் மாநகராட்சி மன்ற பொது நூலக
குருநகர் கிளை நூலகம்


பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சிறீயம்

நகை: 32 | ஆனி - 1993 | சுவை: 3

## முன் முறுவல்



பிள்ளை :- இந்தக் கோழியை ஏன் தூக்கிப் போட்டு உரிக்கிறாங்?

தாய் ;- அது பாவம் ... அதுக்கு வேர்க்குதாம்.

நேர்ஸ் :- இப்போ எப்படி?

பெண் :- அவர் அடித்த நோ மாறிவிட்டது ஆனால் குடிக்கிறார் என்ற மன நோ மாறவில்லை.

மகன் - அப்பா உந்த ரேடியோவைப் போட்டு விடுங்கோ நான் பரீட்சைக்குப் படிப்பதற்கு

பூசகர் :- உந்தச் சத்தத்தில் என்னென்று படிக்க முடியும்.

மகன் :- கோயில் ஒலிபெருக்கி சத்தத்தில் பழகிப் போச்சு.

ஆண் கழுதை:- இன்றுதான் ஒருசுவையான சாப்பாடு சாப்பிட்டேன்.

பெண் கழுதை :- !!!

ஆண் கழுதை:- பாயாசம் எப்படிச்சரிபண்ணிறது என்ற குறிப்புக் கொப்பியைச் சாப்பிட்டன்.

○ :- ஒருதன்தான் காலமறிந்து பிறந்த நாள் பரிசு தந்திருக்கிறான்.

□ :- !!!

○ :- வெகிர்ப்பரு உரைஞ்சுவதற்கு அரத்தாள் தந்திருக்கிறான்.

பெண் நாய் :- நாங்களும் சில தமிழரும் இனத்துரோகிகள்!

ஆண் நாய் :- ஓம். நாங்கள் எங்களுக்குள் கடிபடுகிறோம்! சில தமிழர் தன் இனத்துக்கு எதிராக உளவு சொல்கிறார்கள்.

# நேயம் நயந்தவை

✱ ஆசிரியர் அவர்கட்கு,

சிரித்திரன் பங்குனி, சித்திரை, வைகாசி இதழ் படித்தேன், முன்முறுவல் முதல்பின்சிரிப்பு வரை அனைத்து விடயங்களும் அபாரம்!

செல்வன், தர்மலிங்கம் தவராஜா
காங்கேசன் துறைவீதி.
கோண்டாவில் மேற்கு.

✱ ஐயா,

'இதுதான் அமெரிக்கா, வாந்தியும் வ..ந்தியும்' போன்ற தகவல் துணுக்குகள் அருமை! இத்தகையவற்றைத் தேடித்தர சிரித்திரனால் மட்டுமே முடியும். வாழ்த்துக்கள்.

செல்வி. மீனலோஜனி கனகசிங்கம்
கல்வயல்,
சாவகச்சேரி.

✱ ஜோசப்பாலாவின் 'மகிழ்வின் மறுபக்கம்' சமுதாயத்தை அறுவைச் சிகிச்சை செய்து பார்க்கும் அருமையான சிறுகதை.

நெல்லியடி, மா. பார்த்திபன்.

✱ 'ஒரு வைத்தியரின் தினக்குறிப்பேட்டிலிருந்து' போலிவைத்தியர்களுக்குச் சாட்டையடி. பணி தொடரட்டும். மருதடியானுக்கும் எனது பாராட்டுக்கள்.

பானைவூர், யே. டேவிட் அல்போன்ஸ்.
யாழ்ப்பாணம்

✱ கவிஞர்களுக்கென 'பிருந்தாவனம்' எனும் பகுதி வரவுள்ளதாக அறிவித்து, அடுத்த இதழை எதிர்பார்க்கும் ஆவலைக் கிளர்த்தியுள்ளீர்கள்.

கோப்பாய், கனக கவிமகன்.

✱ வழமைபோலவே இம்முறையும் நிலைக் கண்ணாடி, மகுடி பதில்கள் அருமையிலும் அருமை. இதற்காகவே நான். சிரித்திரனைத் தேடி வாங்குவதுண்டு.

வவுனிக்குளம், செ. செல்வராசா
மாங்குளம்.

# பிரச்சனை அர்ச்சனை

நாதன் வீதி,
இணுவில்,
22.05.1993

இளம் மிதிவண்டிப் பயணிகள்,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்!

தயை கூர்ந்து, தங்கள் உல்லாசப் பயணத்துக்கு நந்தியாய் யான் இருப்பதாகக் கருத வேண்டாம். ஆனால், பாருங்கள், எத்தனை விபத்துக்கள்! அத்தனையும் தவிர்க்கப்படக்கூடியவையே. தவிர்க்கக் கூடியவர் நீங்களே. அதனாற்தான், காவல் துறையினர் 'ஒருவருக்கு மேல் அருகருகே மிதிவண்டியில் செல்லக்கூடாதென' ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்துள்ளார்கள். ஆனால் நீங்கள்.....? தூரத்தே சீருடையைக் கண்டவுடன், பதுமைகளாய், ஒருவர் பின் ஒருவராக, ஒழுங்கைப் பேணுகிறீர்கள். சீருடை கண்ணை விட்டு மறைந்ததும், மீண்டும் உங்கள் வீதி ஆக்கிரமிப்பு! வீதி, உங்களின் பின்னே வருபவர்களுக்கும் தான்! இனிமேலாவது இதை நினைவில் வைத்துச் செயற்படுவீர்களா?

இங்ஙனம்
சி. விக்கினேஸ்வரன்

சசிகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு

ஒலிபெருக்கிப் பிரியர்கள்,
சகல ஊர்களும், தாய்நாடு.
ஐயாமார்களே,
பங்குனி, சித்திரை, வைகாசி (1993)

சிரித்திரன் இதழில் ஒரு வாசகத் தோழர் தங்களிடம் தயை கூர்ந்து, தாழ்பணிந்து விடுத்திருந்த வேண்டுகோளை அறிவீர்கள். ஆனாலும், உங்கள் ஆரவாரங்கள் ஓய்வதாயில்லை. எப்போதுதான் உண்மை உங்களுக்கு உறைக்கப் போகுதோ!

இங்ஙனம்
கனகலிங்கம் பரமேஸ்வரன் (ரூபன்)

# நிலைக்கண்ணாடி

# தூரத்திற்குப் போய்விட்டது

எம்மிடம் உளவியல் பண்பு இல்லை. புத்தகத்தில் இருக்கிறது. அகத்தில் இல்லை. உதட்டில் இருக்கிறது. உள்ளத்தில் இல்லை.

ஜனநாயகம், பஞ்சசீலம், அகிம்சை, தார்மீகம் என்று சர்மாவேசமாகப் பேசுகிறோம். ஒன்றும் செயல் முறையில் இல்லை. இது கால் நடைகள் பல்லக்குப் பேச்சு பேசுகிறகாலம்.

ஐக்கிய நாட்டு ஸ்தானிகராலயக் கட்டிடம் மக்கள் ஒலத்தால் அதிர்கிறது. அமைதிப்புறா குருதிப்புனலில் சிறகடிக்கிறது. உலகை நச்சுப்புகை கவிந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தற்பாதுகாப்புறுதியைக் கருதியே தன்னைக் கயிறாகத் திரிக்கிறான். ஓடி ஓடி உழைக்கிறான், ஓடி,ஓடி வங்கியில் போடுகிறான், சேமித்து சேமித்து சேமலாப நிதியில் சேர்க்கிறான். எல்லாம் எதிர்காலப் பாதுகாப்புக் கருதியே. உளத்தூய்மையில்லாதவர் உயர் பதவியிலிருந்து கொண்டு மக்கள் துயர் துடைப்பது பகற் கனவாகும். பண நெருக்கடி மலைப்பாம்பு போல் மக்களை நெரிக்கும் சத்தம் காதை அடைக்கிறது. அந்நிய நாட்டில் கையேந்திப் பிச்சை எடுத்துவிட்டு கண்ணைக் கட்டிக் கொண்டு கண்ணாமூச்சி விளையாடுகின்றோம். ஓடாய்ப் போன மக்கள் ஓடு ஏந்தி பசியில் ஓலமிடும் சத்தம் குளிரூட்டிய அறைக்குள் இருக்கும் மந்திரிகளுக்குக் கேட்காது.


அன்புதான் மதங்களின் அடி நாதம். அந்த அன்பு என்ற நாதம் அன்றும் கேட்கவில்லை; இன்றும் கேட்கவில்லை. அன்று வாள் சத்தம் கேட்டது. இன்று துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. உலக மத வரலாறு குருதி தோய்ந்த பக்கங்களாகவே இருக்கிறது. ராட்சியங்களுக்குள் நடந்த போர்களிலும் பார்க்க மதங்களுக்குள் நடந்த போரே வரலாற்று நூல்களின் பக்கங்களை குருதியால் நனைக்கிறது.

மனிதனை மனிதன் தூசிப்பதற்கு மதங்கள் ஏராளமுண்டு, ஆனால் மனிதனை மனிதன் நேசிப்பதற்கு மதங்களில்லை, எனத் தத்துவ ஞானி சர்வப்பளி ராதாக்கிருஷ்ணன் சாடுகிறார்.

பரீட்சையில் சித்தியடைய எல்லா இயல்களும் படிக்கிறார்கள். வாழ்க்கையில் சிறப்படைய அறவியலில் அக்கறையில்லை. அறவியல் இன்று அலுமாரியினுள் மூடிய தூசி படிந்த புத்தகமாக இருக்கிறது.

சிறப்பும் செல்வமும் குறுக்கு வழியில் சேர்க்கும் உலகமிது! ஏழைக்காக நீ உதிர்க்கும் கண்ணீரை முத்து மாலையாக இறைவன் தருகிறான் எல்லோரும் குறுக்கு வழியால் விக்கிரமாதித்தன் சிங்காசனத்தைக் கைப்பற்ற நிற்கிறார்கள். எல்லோரும் குறுக்கு வழியால் குபேரர்களாகப் பார்க்கிறார்கள்.

நூல் நிலையத்திற்கும், கோயிலுக்கும் குறுக்கு வழியால் போகலாம். ஆனால், உளக் கோயிலுக்குப் போவதற்குக் குறுக்கு வழி இல்லை! □



# மகுடி

## கேள்வி-பதில்கள்

**ஐ.சிவபாதம்** — கரவெட்டி வடக்கு

☐ தற்போது தமிழீழத்தில் நிலவிவரும் பொருளாதாரப் பிரச்சினை பற்றி உங்கள் கருத்து?

○ கணக்குப் பார்த்துக் கூற குத்துவிளக்கிற்கும் எண்ணெய்யில்லை.

சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இக் கேள்வி மில்க்வைற் அதிபரின் ரூபா 50/= சன்மானத்தைப் பெறுகிறது.

**சி.சாருகேசி**

☐ எவன் ஞானக் குருடன்?

○ தெய்வங்களுககுள் உயர்வு தாழ்வு பார்ப்பவன்.

**மு.தேவகுமார்**

☐ அண்மையில் நீர் கண்ட கனவு என்ன?

○ சோகை பிடித்த சமுதாயமென சோக்கிரட்டீஸ் சோகமாக இருக்கக் கனவு கண்டேன்.

**சு.ராகினி** — உடுப்பிட்டி

☐ உத்தியோகம் பார்க்கும் பெண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

○ பொருளாதாரச் சுமையை இழுப்பதற்கு கணவனுடன் நுகத்தில் தோள்கொடுப்பவள்.

**சி.ஸ்ரீஜீவா** — வட்டுக்கோட்டை

☐ வடபகுதியில் இன்று வாழும் தமிழரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

○ வீராங்கனைகள் எறிகணையை கையால் ஏந்தும் மண்ணில் வாழ்கிறோம்.

**து.காந்திமதிநாதன்** — வல்வெட்டித்துறை

☐ ஒருத்திக்குத் துன்பம் மாறி மாறி வந்தால்

○ துன்பக்கடலில் மூழ்கினால் சில சமயம் வாயில் முத்தோடு வெளிவருவாள்

**சி.சந்திரன்** — சித்தன்கேணி

☐ தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் பயன் தரும் மரங்களை நடுவதால் என்ன பயன்?

○ மரங்கள் இல்லாவிட்டால் பாழ்குடா நாடு நச்சுவாயு கூண்டாக மாறியிருக்கும்.

**சி.அனுஷா** — கரவெட்டி

☐ விதியை நோகலாமா?

நேரம் காட்டும் கடிகாரம் தவறினாலும்

○ விதியைக் காட்டும் கடிகாரம் தவறாது.

**சி.அரசரத்தினம்** — கரவெட்டி

☐ எது உபத்திரமான உபதேசம்?

○ நூல் நிலையம் எரிந்த சாம்பல் மேட்டில் மலைப்பிரசங்கம்.

**தாமோதிரம்பிள்ளை** — கைதடி

☐ நண்பனுக்கு உயர் பதவி கிடைத்தால்?

○ நண்பனுக்கு கொம்பைக் காட்டுவான் எதிரிக்கு அம்பைக் காட்டுவான்

**த.குருபரன்** — வரணி

☐ எமது கலாச்சாரம் மறந்தவன் ஊர்திரும்பினால்?

○ பிரசாதத்தை முள்ளுக்கரண்டியால் சாப்பிடுவான்.

**க.ஞானம்** — ஆனைக்கோட்டை

☐ மனிதன் விரும்பும் வீட்டிற்கும் வள்ளுவன் விரும்பும் வீட்டிற்கும் வேறுபாடு?

○ மனிதன் வீட்டிற்கு பாகப்பிரிவினை உண்டு

**சி.லோகேஸ்** — பளை

☐ வீடு எப்படி இருக்கக்கூடாது?

○ 'விடுப்புப்' பேசும் அடுப்பங்கரையாயிருக்கக் கூடாது.

**சிவராம்** — **சுன்னாகம்**

☐ ஆலய உற்சவத்தின் போது நாதஸ்வர வித்துவான்கள் சினிமாப் பாடல் வாசிக்கலாமா?

○ பூக்கடையில் புலால் மணக்கலாமா?

**நாதன்** — **வவுனியா**

☐ பழுத்த பாஷாண அரசியல்வாதி நல்லவனாக மாறமுடியுமா?

○ நஞ்சு பன்னீராகுமா?

**சி.இராஜலட்சுமி** — **யாழ்ப்பாணம்**

☐ தீர்த்தமாடும் இளைஞர் பெண்கள் மீது தீர்த்தம் எத்தி இன்பம் காணலாமா?

○ அவன் சகோதரி தீர்த்தம் ஆட வரவில்லைப் போலும்.

**சி.குமார்** — **புலோலி**

☐ பிறேக்,லயிற்,மணி இல்லாமல் சைக்கிள் ஓடுபவர் பற்றி உமது கருத்து

○ சுசு,ஏய் ஏய், ஓ ஓ என்று மாடு மேய்க்கிறார்கள்.

**சி பரமேஸ்வரி** — **புலோலி**

☐ மோட்சமெது நரகமெது?

○ பலம் மோட்சம்...... பலவீனம் நரகம்.

☐ நாம் சுதந்திரம் அறுவடை செய்ய என்ன செய்ய வேண்டும்?

○ நடிப்புச் சுதேசிகளை களைபிடுங்க வேண்டும்

**தணிகாசலம்** — **கரவெட்டி**

☐ இறந்தகாலம் எதிர்காலம் பற்றி

○ இறந்தகாலம் புதைக்கப்படவேண்டும்
எதிர்காலம் விதைக்கப்படவேண்டும்

**த.சிவம்** — **கோண்டாவில்**

☐ மனைவியுடன் நல்ல கணவனாகவும் அயலவனுடன் நல்ல நண்பனாகவும் வாழ என்ன செய்ய வேண்டும்?

○ 'தாலியை அடைவு வையாதே
வேலியைத் தள்ளி அடையாதே'

**சி விசு** — **பளை**

☐ ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது என்பதற்கு விளக்கம்

○ சூரியன் படத்தை வைத்துக்கொண்டு புத்தகம் படிக்கலாமா?

**சி.ரதினா** — **யாழ்ப்பாணம்**

☐ அறிவாளிக்கும் ஞானிக்கும் உள்ள வித்தியாசம்

○ அறிவாளி புத்தகத்தில் அறிவைத்தேடுபவன் ஞானி தனக்குள் தன்னைத் தேடுபவன்

**சி.சறோஜினி** — **நீர்வேலி**

☐ ஓர் இடத்தில் இருக்காதது எது?

○ வெளிச்சமும் இருளும்

**மா.மாதினி** — **புலோலி**

☐ பௌத்தமதம் என்ன சொல்லவில்லை?

○ தமிழின நோயாளிகளையும், தமிழ் மாணவரையும் இருட்டில் வைக்கச் சொல்லவில்லை.

**கா.மதன்** — **தமிழ்நாடு**

☐ அன்று சிறந்து விளங்கியது இன்று தாழ்வுற்றதேன்?

○ அன்று தமிழ்நாடு தமிழன் நாடாயிருந்தது

**ம.மணிமாறன்** — **புலோலி**

☐ ஒரு கலைப் படைப்பு எப்போ ரசிக்கப்படுகிறது?

○ உயிரோட்டமுள்ள படைப்புக்கு நாடித்துடிப்பு உண்டு. படைப்பின் துடிப்பும் ரசிகனின் துடிப்பும் இனிது இணையும்போது ரசனை ஏற்படுகிறது.

---

மகுடியாரிடமிருந்து தங்கள் சந்தேகங்களைத் தீர்க்க விரும்புவோர் கேள்விகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

மகுடி பதில்கள்,
சிரித்திரன்,
550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


---

☆ சுதந்திரத்திற்கு நாம்கொடுக்கும் விலைதான் கட்டுப்பாடு.

☆ ஆரோக்கியம்தான் பெரும் செல்வம், அதற்கு வரி கட்டத்தேவையில்லை.

# மெயில்வாகனத்தார் மனோரதம்

ஊர் சுற்றி வந்தேன் கால் உளைவெடுத்தது. உட்கார்ந்து விட்டேன். மனோரதச் சக்கரம் ஓய்வதில்லை. என் மனோரதம் புறப்பட்டது சாவகச்சேரி வந்தது. மாம்பழ மணம், ''மூக்கே நீ முரலாய்'' என்று பாடியது. மாம்பழ முகர்ச்சியில் நிற்கும் போது நண்பர் ஒருவர் பிரசன்னமானார். ''எடேயப்பா! நீ கனடாவிற்கு விண் கூவிக் கொண்டு பறந்து போயிருப்பாய் என்று நினைத்தேன். நீ இங்கு முன்னால் நிற்கிறாய்! இது கனவா? அல்லது நனவா?'' என்று தடுமாறினேன்.



''என்ன விபரீதமான கேள்வி ஐயா இது! கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தையும் கர்நாடக சங்கீதத்தையும் எப்படி நான் பிரிந்திருப்பேன். இது இரண்டும் எமது மண்ணின் அமிர்தங்கள்!'' என ஆனந்தம் பொங்கக் கூறினார். தட்சணாமூர்த்தியின் விரல்களின் மதுர மின்னல் வேகத்தை பி. எஸ். ஆறுமுகம்பிள்ளையின் நாதஸ்வரத்தின் மனோதர்ம தேன் அலையின் இன்பத்தை என்று கூறித் தனது கண்களைத் துடைத்துக் கொண்டார். மனோரதம் திடீரென வை எம். சி. ஏ சென்றது. அது நான் வை. எம். சி. ஏயில் தங்கிய காலம், என் அறையில் தங்கியிருந்தவரும் ஓர் யாழ் அன்பர். எனக்கு ஊரிலிருந்து ஒரு பெட்டி கறுத்தக் கொழும்பான் மாம்பழம் வந்திருந்தது. என் அறையைப் பகிர்ந்துகொண்ட நண்பருடன் மாம்பழத்தையும் பகிர்ந்துகொள்ள பத்துப் பழத்தைக் கொடுத்தேன். நண்பன் Sorry I dont eat these Local Fruits என்றார். நான் உடனே ''மத்திய கிழக்கு மக்கள் யாழ்ப்பாண மாம்பழ ரசத்தில் நீந்துகிறார்கள். நீர் செம்பாட்டு மண்ணில் தவழ்ந்து வளர்ந்திட்டு யாழ்ப்பாண மாம்பழத்தை These 'Local Fruits' என்று கொப்பழித்தீரே!'' என்று கூறினேன். அவர் ஒன்றும் பேசாது உறைந்து போய் நின்றார். மனோரதம் மறுகணம் நைஜீரியாவில், கல்வி கற்றுக்கொடுத்து வந்த நண்பனை வலம் வந்தது, நைஜீரியாவில் முருங்கைக் காயை கரும்பு எனச் சுவைக்கும் எங்களை பிசாசுகளென அஞ்சுவார்களாம், முருங்கைக்காயை அங்கே Devil Stick என அழைப்பார்களாம். மனோரதம் திடீரென 'புறக்கோட்டை' பேசுகிறது. 'யாப்பானே அம்ப', 'யாப்பானே அம்ப', 'யாப்பானே முறுங்க', 'யாப்யானே முறுங்க' என்று அங்கு தொண்டை கிழியக் கத்தும் ஓசை எனது செவிப் பறைகளை அதிரச் செய்கிறது. ஆம் 'யாப்பானே அம்ப,' 'யாப்பானே முறுங்க' சிங்கள சகோதரருக்குச் செந்தேனாக, செங் கரும்பாகச் சுவைக்கிறது. □

ஒரு அங்குலம் தங்கத்தைக் கொண்டு
ஒரு அங்குலம் நேரத்தை வாங்க முடியாது.
-சீனப் பழமொழி

## பிருந்தாவனம்

'பிருந்தாவனம்' பகுதி தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்விதழில் ஆரம்பிக்கவில்லை.

—ஆசிரியர்

போட்டி

## கவர் கவிதை

வாசகர்களே!

அட்டையில் கண்ட கருத்தோவியத்திற்குப் பொருத்தமான கவிதை எழுதி அனுப்புங்கள். 10 வரிகளுக்கு மேற்படாது அமையட்டும். தேர்ந்தெடுக்கப்படும் தரமான கவிதைக்கு இனி வெளிவரும் 6 சிரித்திரன் இதழ்கள் இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

# கதைத்தேன்

## உணர்வு

அன்று அகதி முகாமில் கஞ்சி போதாமல் போய்விட்டது. கியூவரிசையில் குவளையுடன் கஞ்சிக்குக் காத்திருந்து தனவந்தன் ஏமாற்றம் அடைந்தவனாய் இரைப்பை உளைவெடுக்க கர்ப்பப்பை குழந்தைபோல் சுருண்டு படுத்துக்கொண்டான்.

அவன் அருகில் வெற்றுக் குவளையைப் பார்த்த ஓர் ஏழை அதை தனக்குக் கிடைத்த கஞ்சியால் நிரப்பி ''ஐயா பசி இருந்து பழக்கப்படாத நீங்கள் இந்தக் கஞ்சியைக் குடியுங்கள்'' என்றான்.

தனவந்தன் ஒரேமூச்சில் குவளையைக் காலிபண்ணிவிட்டு வயிறு குளிர்ந்தவனாய் ''பசிப்பிணி போக்குவதுதான் சிறந்த திருப்பணி. இந்த அன்புதான் மதங்களின் அடிநாதம். அது சரி... உனக்கு என்னை முன் பின் தெரியுமா?''

அதற்கு ஏழை

''ஐயா நான் அறிமுகம் பார்த்து கஞ்சி தரவில்லை பசிமுகம் பார்த்துத் தந்தேன்'' என்றான்.

—சிவானு

## கவர் கவிதை

### நெய் இரஞ்சி நெய்கின்ற

நாடிக்கை வைத்து
வேடிக்கை பார்க்கின்ற
வங்கிக்குத் தெரியுமா
வறுமையின் வாசம்?
கலங்கரை விளக்கெரிய
தீவட்டிகளிடமல்லா தீர்வுகேட்கிறாள்.
நிமிர்ந்து வாழவைக்க
குனிந்து நிற்கிறது வயிறு
இந்தத் தாய் - மகனை
பத்துமாதமல்ல - படிப்பிற்காய்
பல்லாண்டு சுமக்கவும் சம்மதம்

பா. நேரா

❋ பங்குனி, சித்திரை, வைகாசிமாத சிரித்திரன் கவர் கவிதைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இக் கவிதையை எழுதிய பா. நேரா அவர்களுக்கு 6 மாத சிரித்திரன் இதழ்கள் இனாமாக அனுப்பி வைக்கப்படும்.




ஜனநாயகம்:- குருதி தோய்ந்த புஸ்பம்

நூல் நிலையம்:- இனவாத அரக்கர்களின் அக்கினிக் குண்டம்.

தேர்தல்:- வேட்பாளர் சோதிடனிடம் உபதேசம் கேட்கும் காலம்.

காதல்:- ஈ என்ரி ஸ்பெஷலிஸ்ட் டாக்டராலும் காப்பாற்ற முடியாத கண்நோய்.

கோடை:- கடல்மீனும் புழுங்குதே யென்று புழுங்கும் காலம்.

நண்பன்:- உனது இரகசியங்கள் போட்டு வைக்கும் வங்கி

இடியப்ப உரல்:- அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதியாகும் பொருட்களில் ஒன்று

முருங்கைக்காய்:- தமிழனின் 'சுயிங்கம்'

எறும்பு:- சீனி சாப்பிட்டும் சலரோகம் வராச் சீவன்.

## வாசினைத் திரவியம்

✾ பெண்ணுக்கு ஏழு பருவங்கள்: கைக் குழந்தை, சிறுமி, வயதுவந்த பெண், இளம் பெண், இளம்பெண், இளம்பெண், இளம் பெண்!

—பேணாட்ஷோ

✾ கணவனுக்கும் - மனைவிக்கும் பிணக்கு ஏற்பட்டால் ம்மனாடுகள் சிலவற்றில் நடப்பது என்ன......?

பிணக்கு ஏற்பட்டதும் ஆங்கிலேயன் கிளப்பை நோக்கி நடக்கிறான்; பிரெஞ்சுக்காரன் தன் பணிப் பெண்ணை நாடிச் செல்கிறான்; அமெரிக்கன் தன் வக்கீலை நாடி ஓடுகிறான்!

இந்தியன்......?

அடுப்படியை நோக்கித்தான். அடுத்த வேளை சமையலை யார் செய்வது......?

—துர்க்காதாசன்

டாக்டர்:- ''பையனுக்கு மைனர் ஆபரேஷன் செய்து விடுவது நல்லதுங்க''

தந்தை:- ''பையனுக்கு இருபத்தொன்று வயசாகிறது. மேஜர் ஆப்பரேஷனே செஞ்சுடுங்க!''

இரா. மோகன்ராஜ்

நன்றி:- இதயம் பேசுகிறது

தொகுப்பு:- சிவா பொன்னுத்துரை

# யாருடைய விதி எப்படியோ?

அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் குடியேறி வசிக்கத் தொடங்கிய புதிதில் பாதிரிமார்களுங்கூடச் சிவப்பு இந்தியர் வசிக்கும் பகுதியில் தற்பாதுகாப்புடன் நடமாடி வந்தார்கள். ஒரு பாதிரியார், சிவப்பு இந்தியப் பகுதி ஒன்றின் வழியாகப் பிரயாணம் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர் ஒரு துப்பாக்கியை எடுத்துக் கருமருந்தைப் போட்டுக்கொண்டிருந்தார். இதைப்பார்த்த ஒருவன் ''உபதேசியாரே! விதியில் நம்பிக்கைகொண்ட நீங்கள் எதற்காகத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு போக வேண்டும்? சிவப்பு இந்தியர்களின் நடுவே நீங்கள் சாகவேண்டும் என்று உங்கள் விதி இருந்தால், செத்துத்தானே தீரவேண்டும்? அப்போது துப்பாக்கி எதற்கு?'' என்று கேட்டான்.

''அது எனக்குத் தெரியும். ஒருவேளை சிவப்பு இந்தியன் ஒருவன் சாகவேண்டும் என்ற விதி இருந்தால் என்ன செய்வது?'' என்று கேட்டார் பாதிரியார்.

# முல்லா வளர்த்த கழுதை!

முல்லா ஒரு சமயம் ஒரு கழுதையை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தான். தினமும் அதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தீனி போடவேண்டும் என்று முல்லாவிடம் ஒருவன் சொன்னான். அந்த அளவுக்குத் தீனி போட்டால் தனக்குக் கட்டுப்படியாகாது என்று குறைந்த தீனியைப் போட்டுக் கழுதையைப் பழக்க நினைத்தான் முல்லா. அதன்படி, நாளுக்கு நாள் தீனியைக் குறைத்துக்கொண்டே வரலானான். கடைசியில் கடைவாய்க்கும் பற்றாத தீனியே கழுதைக்குக் கிடைத்தது. இந்த நிலையில், வயிற்றுக் கொடுமை தாங்காமல் கழுதை செத்துப் போய்விட்டது.

அப்போது முல்லா, ''அடபாவமே! இன்னும் கொஞ்ச நாட்கள் இந்தக் கழுதை சாகாமல் இருந்திருந்தால், தீனியில்லாமலே உயிர் வாழ்வதற்கு இதைப் பழக்கியிருப்பேனே!'' என்றான்.

சிரித்திரன் சிறுகதைப்

## போட்டி முடிவு

சிரித்திரன் நடாத்திய சிறுகதைப் போட்டியிற் தரமானதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு ரூபா 500/ ஐப் பெறும் கதை 'கவிஞனின் மகள்'

எழுதியவர்:- ஈழமுத்து

முகவரி:- மு. விஜயராகவன்
'செல்வ பவனம்'
ஞானப் பிரகாசர் வீதி,
உடுவில்.

இவருக்குரிய பரிசை ஏழுவிலைச் சேர்ந்த ஒரு இலக்கிய அன்பராகிய பிரதிலி அவர்கள் வழங்குகின்றார்.

இக்கதை அடுத்த இதழில் இடம்பெறும்.

## பண்பின் வழியே விழி

மன்னன் திருதராட்டினன் தன் மைந்தன் துரியோதனனையும் தன் தம்பி மகன் தருமரையும் அழைத்து உலகைச் சுற்றி வந்து அவர்களின் மனப்பதிவைக் கூறுமாறு பணித்தார். உடன் இருவரும் உலகை வலம் வரப் புறப்பட்டனர். துரியோதனன் முதலாவதாக வந்து உலகம் முழுவதும் கள்வர்களாலும், காமுகர்களாலும், சூதாடுபவர்களாலும், விபச்சாரிகளாலும் நிரப்பி வழிகிறது என மொழிந்தார். தருமர் பின்பாக வந்து உலகம் சத்தியசிலர்களாலும், தர்மவான்களாலும், தவச்சீலர்களாலும், ஞானிகளாலும் நிறைந்திருக்கிறது எனக் கூறினார்.

இருவரும் பார்த்தது ஒரே உலகைத்தான்.

# ஒரு வைத்தியரின் தினக்குறிப்பேட்டிலிருந்து

[சென்ற இதழ் தொடர்ச்சி]

மருந்துச் சிட்டைக்கு மருந்து விற்கும்போது குளிசைக்கான விலையை மாத்திரம் வாங்க வேண்டும். கூடக் குறைய வாங்கினால் வாடிக்கையாளர்கள் விலை ஏற்றத் தாழ்வுகளைப் புரிந்துகொண்டு தமது வாடிக்கை கடையையே மாற்றி விடுவார்கள்.

ஆனால் நாரிக்குத்து, காய்ச்சல், இருமல் போன்ற ஏதாவது ஒரு நோய்க்கு மருந்து கேட்கும் ஏமாளிகளை ஏய்ப்பது சுலபம். இரண்டு, மூன்று வெவ்வேறு ரக மாத்திரைகளைக் கொடுத்து அதிக பணத்தை அறவிட்டுவிடுவார்கள்.

கொள்ளையர்கள்!
பகற் கொள்ளையர்கள்

போரினாலும், குண்டு வீச்சினாலும், உணவு மருந்துத் தட்டுப்பாட்டினாலும், இன்னலுறும் மக்களை, ஜீவனோபாயத்திற்கான தொழிலின்றி வாடுகின்ற மக்களை, அகதிகளாக அலைகின்ற மக்களை, எவ்வித சமுதாயப் பொறுப்பும் இன்றிக் கண்மூடிக் கொள்ளை அடிக்கிறார்கள்.

மிக ஆபத்தான மனநோய் மருந்துகளையும் நித்திரைக் குளிசைகளையும்கூட எவ்வித கேள்வியும் இன்றி விற்பனை செய்கிறார்கள். இதனால் எத்தனை தற்கொலைகளுக்கும், இழப்புக்களுக்கும் இவர்கள் காரணமாயிருந்தார்களோ யார் அறிவார்?

விற்பனைக்கான காலம் முடிந்துவிட்ட (Expiry date) மருந்துகளைச் சந்தடியின்றி விற்பனை செய்துவிடுவார்கள். நோயாளிகளுக்கு அவற்றால் ஏற்படப்போகும் பக்கவிளைவுகள் பற்றியோ ஆபத்துகள் பற்றியோ இவர்களுக்கு அக்கறையே கிடையாது; பணப் பெட்டி நிரம்பினால் போதும்.

மிக ஆபத்தான மருந்துகள் என உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட பல மருந்துகளை (உ-ம் பியூடா சொலிடீன், கியூமாரிட்) இங்கு சாதாரணமாக வாங்கலாம்.

கியூமாரிட் மருந்து பற்றி
ஒரு வார்த்தை
கரு அழிப்பு மருந்து!

அப்படி நினைத்துத்தான் வாங்குகிறார்கள்; விற்கிறார்கள்.

ஆனால் உண்மையில் கரு அழிப்பு மருந்துகூட அல்ல. பரிசோதனை மருந்தாக முன் எப்பொழுதோ பாவிக்கப்பட்ட, ஆனால் நீண்ட நெடுங்காலமாகத்தடை செய்யப்பட்ட மருந்து. கருவுற்றிருக்கும்போது இதனை உபயோகித்தால் கூன், குருடு, செவிடு, மன வளர்ச்சியின்மை போன்ற குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறக்கலாம். அது அக்குடும்பத்திற்கு எவ்வளவு சுமை! வேதனை!!

முறையாக வைத்தியம் படித்த எந்த வைத்தியனுமே உபயோகிக்க மறுக்கும் மருந்து.

ஆனால் மருந்துக் கடைகளில் சர்வ சாதாரணமாக விற்பனையாகிறது. மலரப்போகும் தமிழீழத்தில் அங்கயீனர்களையும், மன வளர்ச்சி குன்றியவர்களையும் உருவாக்கி, குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் சுமையை ஏற்றப்போவது தான் இவர்களது நோக்கமா?

இன்னமும் எத்தனை தில்லுமுல்லுகள்

புரோகேன் ஊசி மருந்து, 5-6 மாதங்களுக்கு முன் ICRC உதவியுடன், வர்த்தகர்களால் கொண்டுவந்து விநியோகிக்கப்பட்டபோது அதன் விலை குப்பிக்கு ஏழு ரூபா அளவிலேயே இருந்தது. இது ஆயிரக் கணக்கில் வைத்தியர்களுக்குத் தேவைப்பட்டபோதும் நூறு இருநூறு தான் கொடுக்கப்பட்டது. இப்பொழுது அதில் ஆயிரம் ஊசி மருந்துகளை கள்ளச் சந்தையில் வாங்க முடிந்தது.

அதே கொம்பனி தயாரித்த
அதே ஊசி மருந்து.
அதே தொடர் இலக்கம்.
விலை மாத்திரம் இருபத்து மூன்று ரூபாய்!
இதே போல்தான் ஏனைய மருந்துகளும்.
300% - 400% கொள்ளை லாபம்.

அண்மையில் ஒரு பெண். இளம் பெண், மூன்று குழந்தைகளின் தாய், ஒரு சிறு முதலாளியின் அன்பு மனைவி அநியாயமாக மரணித்துவிட்டாள்.

நோயினால் மரணிக்கவில்லை.

## சிரித்திரு

### அறிவித்தல்

அந்நிய நாட்டில் இருந்து வரும், எட்டுப்பிள்ளைகளின் பணத்தை வங்கியில் போட்டு விட்டு ஓசியில் பேப்பர் படித்துக் கொண்டு, தேசியம் பேசும் பெரியாருக்குப் பொற்கிளி வழங்கி பொன்னாடையும் போர்த்தப் படும்.

மருந்து கிடைக்காததினால் மரணிக்கவில்லை.

சரியான மருந்து சரியான நேரத்தில் கிடைத்துக்கூட மரணித்துவிட்டாள்!

நம்பமுடியாத மரணம் சுலபமாகத் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய மரணம்.

அநியாயமாக ஒரு உயிர் பறிபோவதற்கு மருந்துக் கடைக்காரர்கள் காரணமாயிருந்திருக்கிறார்கள்.

அவள் ஒரு ஆஸ்த்மா நோயாளி.

நேரத்திற்கு நேரம் மாத்திரைகள்; அடங்காவிட்டால் ஊசி; அதற்கும் கேட்காவிட்டால் வாட்டில் அனுமதித்து மருந்து கலந்த குளுக்கோஸ் ஏற்றுவார்கள்.

இது குடும்பத்தினருக்கு ஒரே தொல்லை.

ஊசியைத் தாங்களே போட்டால் என்ன எனச் சிந்தித்தார்கள். ஆனால் அது ஒரு ஆபத்தான ஊசி-அட்ரீனலின்-நோயாளியின் நாடித்துடிப்பு, சுவாசம் போன்றவற்றை நுணுக்கமாகப் பரிசோதித்துப் போட வேண்டிய ஊசி. மிக அவதானமாக, அநுபவப்பட்டவர்கள் போட வேண்டிய ஊசி. ஏற்றிய ஊசி, சிறு ரத்தநாளங்களைக்கூடத் தாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி, கவனமாகச் சிறிது சிறிதாக ஏற்ற வேண்டிய ஊசி.

எனவே கடைகளில் தனிப்பட்டவர்களுக்கு விற்கப்படுவதில்லை அதுவும் டொக்டரின் பிரிஸ்கிரிப்ஷன இல்லாமல் ஒருபோதும் விற்கக்கூடாத ஊசி மருந்து.

ஆனால் அவர்களுக்கு எந்த விதத் தடையுமின்றிக் கிடைத்தது. பணம் பாதாளம் வரை பாயும் தானே.

அன்று ......!

அவளுக்குத் தொய்வு இழுக்கத் தொடங்கியது.

குளிசைகளுக்குப் பணிய மறுத்தது.

அலுமாரியில் ஊசி மருந்து இருந்தது. அதையும் அதை ஏற்றும் குழாயையும் எடுத்தாள். கொதிக்க வைப்பது, கிருமி நீக்குவது போன்ற 'வீண்' 'சடங்குகளில்' அவள் நேரத்தைச் செலவழிப்பதில்லை!

குப்பியை உடைத்தாள், குழாயில் மருந்தை இழுத்து எடுத்தாள், சதக் எனச் சடுதியாகத் தனது தொடையில் தானே ஊசியைக் குத்தி, மருந்தை விரைவாகப் பாய்ச்சினாள்.

விரைவாக, மிகவிரைவாக ஆனால் ஆஸ்த்மா உடனே அடங்கவில்லை.

பொறுத்திருக்கப் பொறுமை




"எங்கே பையோடை ......?

"வேறை எங்கே? எங்கடை ஜெயந்தி கிறைண்டிங் மில்லுக்குத்தான்!"

"ஜெயந்தி கிறைண்டிங் மில்"

பிரதான வீதி - சுழிபுரம்

யும் இல்லை.

"இன்னுமொரு ஊசி போட்டு விடுங்கோ" அருகே வந்த கணவனிடம் கேட்டாள்.

அவனும் யோசிக்கவில்லை, தயங்கவும் இல்லை; ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே இரண்டாவது ஊசி! முன்பு போலவே எந்தவித பாதுகாப்போ; நிதானமோ இன்றி மூடத்தனமாக ஏற்றப்பட்டது.

ஏற்றிய ஊசியை இழுத்து வெளியே எடுப்பதற்கிடையில் அவள் சாய்ந்துவிட்டாள்.

அவளது .....
நெஞ்சம் படபடத்தது
இருதயம் தாறுமாறாக அடித்தது.
மூச்சுத் திணறியது.
உடல் வியர்த்துக் குளிர்ந்தது
வாயால் நுரை கக்கியது.
கண்கள் மேலே செருகின

ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்கிடையில் அவளது ஆவி பிரிந்துவிட்டது.

இத்தகைய அவல மரணங்களுக்கு இவர்கள் என்ன நியாயம் கூறப்போகிறார்கள்?

ஆனால் மருந்துக் கடைக்காரர்களை மட்டும், மருந்தின் விலைக்கு முற்று முழுதாகக் குறை கூற முடியாது.

முன்பு அரசாங்கத்தின் திட்டமிட்ட தடைகளும், கபடத்தனமான கட்டுப்பாடுகளும் அமுலுக்கு வருவதற்கு முன்-யாழ்ப்பாணக் குடாநாட்டில்தான் மருந்துகள் மலிவாக விற்கப்பட்டன. கொழும்பை விட மலிவாக இருந்தன. மருந்துக் கொம்பனிகளால், கடைக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் போனஸ் லாபங்களைக்கூட பாவனையாளர்களுடன் பகிர்ந்து, மருந்துகளின் விலைகளை லேபலில் இருக்கும் விலையை விடக் குறைத்து விற்றனர்.

இன்று கட்டுப்பாட்டினால் விளைந்த தட்டுப்பாட்டின் காரணமாக, மருந்து விற்பனை 'கள்ளச் சந்தை' வியாபாரமாகிவிட்டது.

மருந்துக் கடைக்காரர்களைத் தவிர வேறும் பலரும் இன்று மருந்து வியாபாரத்தில் இறங்கிவிட்டனர். வெறிச் சாராதிகளும், தனிப்பட்ட கொழும்பு வியாபாரிகளும், வவுனியாவிற்கு அப்பால் செல்லும் அரசாங்க ஊழியர்களும்கூட மருந்து வியாபாரிகளாகிவிட்டார்கள். அவர்கள் கூறுவதுதான் விலை (அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் வேறு கதை). இந்த விலைகள், மனித நேயத்தை மறந்த விலைகள்.

இத்தகைய விலைகளில் மருந்தை வாங்கினால், மருந்தினால் நோயாளி குணமாவதை விட, அதன் விலையைக் கேட்டு அவன் மரணிப்பதே அதிகமாகப் போகிறது.

எம்மிடையே இருந்து, எமது மக்களையே உறிஞ்சிக் குடிக்கும் இந்த ஒட்டுண்ணிகளிலிருந்து எமது மக்களைக் காப்பாற்ற கடவுளாலும் முடியுமோ தெரியவில்லை.

முன்பு மருந்துக் கடை வைப்பவர்களுக்கு ஒரு தகமை வேண்டியிருந்தது. 'பார்மஸிட்' படிப்பு படித்த ஒருவரே மருந்துக் கடைக்குப் பொறுப்பாக இருக்க முடியும். ஏனெனில் மருந்துகள் பற்றிய நுண்ணறிவு அவர்களுக்குத் தேவையாயிருந்தது.

ஆனால்..... இன்று.....
எவருமே மருந்துக் கடை போட்டுவிடலாம்; எவருமே மருந்து வியாபாரியாகிவிடலாம்.

வேறெந்தத் தொழிலுக்கும் லாயக்கற்றவர்கள்கூட மருந்து வியாபாரத்தை ஆரம்பிக்கலாம். பசப்பு வார்த்தை பேசி, விற்கத் தெரிந்தால் போதும்.

மண்ணெண்ணெய்க் கடைகளில்கூட மருந்துகள் விற்பனையாகின்றன.

கூவிக் கூவி அமோகமாக விற்பனை செய்கிறார்கள்.

ஏனென்றால் மண்ணெண்ணெய் வியாபாரத்தைவிட மருந்து வியாபாரம் லாபகரமானதாகிவிட்டது.

எனவேதான் கேட்கிறேன்...
மருந்து வியாபாரிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றக் கடவுளாலும் முடியுமா?

# போனதும் வந்ததும்

அவருடைய மாடு திடீரென்று காணாமற் போய்விட்டது. எங்கெல்லாமோ தேடியும் கிடைக்கவில்லை. வேதனையும், யோசனையுமாய்த் திண்ணையில் இறுகிப்போய் இருந்தார். பக்கத்து வீட்டுக்காரர் வந்தார். அவர் முகத்திலும் வேதனையின் இருள். வந்தவர் இவரிடம் சொன்னார்: "என்ர மாடு மெல்லே காணாமல் போட்டுது!"

திண்ணையில் உறைந்து கிடந்தவரிடம் சிறிது அசைவு. அவர் முகம் வெளிச்சது; பெரிதாய் ஒரு புன்னகை செய்தார். வந்தவருக்கோ திகைப்பு. "என்னப்பா? என்ர வேதனையையும் கேட்க நீ ரட்டிப் பாயெல்லோ கவலைப்படுவாயெண்டு பார்த்தன். நீ சிரிக்கிறியே!"

முதலாமவர் சொன்னார்: "உன்ர மாடு போனது, என்ர மாடு வந்ததுக்குச் சரி"

★ சிவா பொன்னுத்துரை

## அரிய வரிகள்

- தேனாறு பாயுது.
  செங்கதிர் சாயுது.
  ஆனாலும் மக்கள் வயிறு காயுது.

  பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

- தேவனைக் கண்டு தண்ணீர்
  நாணிச் சிவந்தது.


- சங்கத் தமிழது மூழ்கிய
  கடலினில் தோழர்கள் மூழ்கினர் - மீண்டும்
  சங்கத் தமிழுடன் எழுநதனர்
  தரணியில் புதுக் கதை எழுதினர்

  -யோகி

- அந்த இடுகாட்டிலிருந்து எழுந்து நடக்கும் போது சாம்பல் கலந்த புழுதயில் முன்னை விட அழுத்தமாய்ப் பதியும் என் 'பூட்ஸ்' அடையாளங்கள்.

  வினோதினி
  நன்றி:- ஈழநாதம்

- உன் அழகை என்னால் வர்ணிக்க முடியாது ஆனால் அதை என்னால் யாழில் வாசிக்க முடியும்.



### Mr & Mrs டாமோடிரன்

Mrs டா:- டார்லிங்!
Mr டா:- யேஸ் டார்லிங்!
Mrs டா:- வட் டு யூ மீன் பை வராட்டி
Mr:- டா அது ஜப்பனீஸ் கராட்டி அடி மாதிரி இது டமிலீயன் கராட்டி அடி.
Mrs டா:- அப்போ நாங்களும் வராட்டி அடிப்போமா?
Mr டா:- வை நொட்
Mrs டா;- தாங்யூ டார்லிங்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உற்பத்தி செய்பவர்கள்
தங்கப்பவுண் நகை உற்பத்தியாளர்கள்

* ''மெல்லக் காதில சொல்லு!
உன் அழகின் ரகசியம் என்ன?''
* ''மூன்று சொல்தான் முருகன் .... ஆபரண........
.........மஹால்.........!''



# முருகன் ஆபரண மஹால்

38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

# சிரிப்பூச் சரம்

இயல், இசை, நாடகம் எங்கும் நகைச்சுவை விரவிக் கிடக்கின்றது. எனவே நகைச்சுவை எங்கேயுள்ளது எதில் உள்ளது ஸ்பது எல்லாம் கூறுவது கடினமானது. மக்களை மகிழ்விக்கும் கலையில் மிகவும் கடினமானது நகைச்சுவை. இவை நீண்டுபோகுமானால் நகைச்சுவையை ரசிப்பவர் பொறுமையை இழப்பர். அதனால் நகைச்சுவை தனது இயல்பினை இழந்துபோகும்.

சிவபுராணம் பாடப்படும்போது ''நமச்சிவாய வாழ்க'' எனத்தொடங்கும் கால்கடுக்க நின்று பாடும் மாணவர்கள் மகிழ்ந்து தமது ஒலியை உரக்கப்பாடுவது 'பல்லோரும் ஏத்தப் பணிந்து'' என்ற வரிகளையே! தமது பாரம் இத்துடன் முடிகின்றது என்ற மன உணர்வு அங்கே தென்படுகின்றது. விருந்தினர் மூன்றுநாளைக்கு என வரையறை செய்யப்பட்டதும் இந்த அடிப்படையிலேயே!

நகைச்சுவையின் மூலம் சமுதாயத்தில் நாம் கண்ட குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும். வெறும் அங்க அசைவுகளோ வாழைப்பழத்தில் வழுக்கி விழுவதோ நகைச்சுவை அல்ல. வாழ்வில் வாழமுடியாத ஒருவன் அல்லது ஒருத்தி செயல்படும் விதம்கூட நகைச்சுவை அன்று. அது நகைச்சுவை என்ற எல்லையைக்கடந்த தனிப்பட்ட நையாண்டியாகிவிடும். 20 ஆண்டுகட்கு முன்பு விமர்சகரான திரு. இ. முருகையன் அவர்கள் புண்ணியம் கிடைக்கும் என ஒரு விமர்சனக் குறிப்பினை எழுதினார். இதில் வறுமைக் கோட்டில் வாழும் மக்களின் செயல்களை நகைச்சுவையாக்கப்படாது என அவர் கூறினார்.

பணவசதி உள்ளவர்கள் பணவசதி அற்றவர்களை இழிவாக நோக்குகின்றார்கள். எனவே பணவசதி அற்றவன் பணவசதி கொண்டவர்களை எவ்வாறு நோக்குவான்? அவன் (பணக்காரன்) தனக்கு உதவி செய்யாவிடில் அவரை ராஜா என்றோ கூஜா என்றோ நோக்கத் தலைப்படமாட்டான். ஏழையும் பணக்காரனை பல்வேறு விதமான முறைகளில் ஒப்பிட்டுக்கேலி செய்யவே பார்ப்பான். இந்த அணுகுமுறைகளில் ஒரு சமதர்மப்பாதையைப் புகுத்திச் சிரித்திரன் வெற்றி பெற்றது. அவ்வாறான சில நகைச்சுவைகளை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஒரு கொழுத்த சீதனம் வாங்கிய மாப்பிள்ளை ரோட்டைக்கடந்து போகின்றார். அப்போது உட்கார்ந்த நிலையில் ஒரு பிச்சைக்காரன் சொல்கிறான் ''டேயப்பா......வேண்டின லட்சம் சீதனத்திலை ஒரு ஐம்பது சதம் எறிந்து விட்டுப்போ''...

சீதனம் வாங்குவது ஒரு முற்போக்கு அல்ல என்பதே நகைச்சுவையின் உள்ளடக்கம். ஆனால் அதனைச் சுட்டுக்காட்டும் பாத்திரம் வறுமைக் கோட்டில் உள்ளது. அப்பாத்திரம் மிகுந்த சீதனம் வாங்கிய அந்த நபரை உயர்வான தமிழில்கூட விழிக்காது பேசுகின்ற ஒரு நிலையைக் காணலாம். இதன் உள்ளுறை உவமத்தை நீங்களே உணர்ந்து கொள்ளலாம். இன்னொரு சந்தர்ப்பத்திலே இதே பிச்சைக்காரன் தான் நாலு நாளாகச் சாப்பிடவில்லை என்றும் அதற்காகப் பணம் தருமாறும் வீதியில் போகும் தடித்த உருவம்கொண்ட பணக்காரனைக் கேட்கிறான். அவனோ தானும் நாலு நாளாகச் சாப்பிடவில்லை என்றும் சாப்பிடவேண்டாம் எனடாக்டர் கூறியதாகவும் கூறுகின்றான் இங்கே பொருள்முதல்வாதக் கருத்துக்கள் கேலியாக்கப்பட்டன. இவ்வாறான இருவேறு துருவங்களை உருவாக்கிய அரசாங்கத்தையும் மறைமுகமாகச் ''சிரித்திரன்'' கேலிக்குரியதாக்கியது.

இலக்கியத்திலே பல்வேறு விதமான அணுகுமுறைகள் உண்டு. மார்க்சீய அணுகுமுறை, சோக்கிரட்டீஸ் அணுகுமுறை தெய்வீகக் கோட்பாடு அழகியல்முறை என்று அவை பலவாகும். இவ்வாறான அணுகுமுறைகள் நகைச்சுவை இலக்கியத்தில் இல்லாவிடினும் சில கோட்பாடுகளைச் ''சிரித்திரன்'' உருவாக்கியது. அக்கோட்பாடுகள் இனம் காணப்படாமையால் விமர்சனத்தில் எழுதப்படவில்லை.

சிரித்திரன் வளர்த்துவிட்ட இந்நகைச்சுவைக் கலை வடிவங்களில் மொழிப்புலமை அணுகுமுறை, கலாசார அணுகுமுறை, கவிதை அணுகுமுறை, ஒப்புமை அணுகுமுறை, கேள்வி - பதில் அணுகுமுறை, குரு-சிஷ்யமுறை, நவீன அணுகுமுறை, பாலியல் முறைமை என்பவை பிரதானமானவை. இந்த அணுகுமுறைகளை இனங்காண முடியாதவர்களில் பலருக்காகவே கேள்வி - பதில் என்ற அணுகு முறையைச் சிரித்திரன் சி. சிவஞானசுந்தரம் தேர்ந்தெடுத்தார்.

**சிரித்திரு**

ஒருவன் :- கண்ணீர் சிந்துகிறாய் அரிச்சந்திரன் நாடகம் பார்த்த கவலையோ.

மற்றவர் :- இல்லை நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒருதன் மணிப்பேர்சை பிக்பொக்கட் அடித்திட்டான்.

## சிரித்திரனின் அணுகுமுறைகள்
## மொழியியல் அணுகுமுறை

மொழிப்புலமை கருத்துப் புலமையுடன் சேர்ந்தால் மொழிநடை ஊடகமாகவும், கவிதை ஊடகமாகவும் கருத்துச்செறிவு மிக்க நகைச் சுவையை உருவாக்கலாம்.

பழம்பெரும் ஓவியரான மைக்கல் அஞ்சலோ தனது முதுமை வாழ்க்கையைப் பற்றிப் பின்வருமாறு மொழியியல் நகைச்சுவை ததும்பக் கூறியுள்ளார். ''இந்தக்குகையில் வாழ்கின்ற எனது தொண்டையில் ஒரு கட்டிவளர்கின்றது. லொம்பார்டி அருவி இடுக்குகளில் இருந்து பூனைகள் இறங்கி வருவதுபோல உடுத்தியிருக்கும் ஆடை வயிற்றுக்குக் கீழே நழுவுகின்றது. என் கால்கள் முன்னுக்கும் பின்னுக்கும் அசைவதால் தொடைகள் சுருங்கி விரிகின்றன. அலங்கோலமாக வளர்ந்திருக்கும் எனது தாடி சொர்க்கத்தை நோக்கி நிற்கின்றது. தலையில் கட்டிய துண்டு முதுகில் அவிழ்ந்து விழுகின்றது. எனது நெஞ்செலுப்புகள் மண் வீணையைப்போல் வளைகின்றன. தூரிகையிலிருந்து தெறிக்கின்ற சிறிதும் பெரிதுமான வர்ணத்துளிகள் என் முகத்தில் கோலங்கள் போடுகின்றன''

இம்மொழியியல் தன்மைகளையும் நகைச் சுவைகளையும் கல்கி நன்குணர்ந்திருந்தார். ஒரு பார்ப்பனர் குளத்தில் வீழ்ந்துவிட்டார். அந்தச் செய்தியை இன்னொரு பார்ப்பனர் குப்பன் என்ற வேலைக்காரன் மூலம் அந்தப்பார்ப்பனர் வீட்டுக்குச் சொல்லிவிட முயல்கின்றார். "திருவடியார் திருக்குளத்தில் திருமுழுக்காடியபோது திருப்பாசி வழுக்கவே திருக்குளத்தில் விழுந்தார்'' என்று குப்பா நீ சொல்லு எனப்பார்ப்பனர் கூறுகின்றார். குப்பன் போகின்றான். தான் சொன்ன விசயம் குப்பனுக்கு விளங்கிவிட்டதோ எனப்புரியாத பார்ப்பனர் குப்பனைக் கூப்பிட்டு நான் சொன்னது யாதோ? என வினவுகின்றார். குப்பன் "கும்பகோணத்துப் பார்ப்பான் குட்டையில் வீழ்ந்தான்'' என்று சொல்கிறேன் என நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்றான். இம்மொழியியல் வடிவங்களைப் பல கோணங்களில் ''சிரித்திரன்'' நகைச்சுவைக்காகப் பயன்படுத்தியுள்ளது. குதம்பல் சித்தர், புலவர் பெருமான், மிஸிஸ் டாமோடிரன். மகுடியார் என்ற பகுதிகள் மொழியியல் அணுகுமுறையால் சிரித்திரனுக்கு வெற்றியை ஈட்டித்தந்தன.


''முகஸ்துதி பேசுறன் எண்டு நினையாதேங்கோ!
உங்க பாலன் ஆலை அரிசியெண்டாத்தான் எனக்கு
ஆனந்தம்''



# பாலன் அரிசி ஆலை
**வட்டுக்கோட்டை**

''நாலு பக்கமும் கடல் சூழ்ந்தது எம் நாடே! கடல்மீன் இறக்குமதி செய்வதும் நம்நாடே'' எனக் குதம்பைச் சித்தர் கூறுகின்றார். மேற்படி நகைச்சுவை என்னால் எழுதப்பட்டதும் 1981 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்த இதயம் பேசுகின்றது ஆசிரியர் மணியன் அதைத் தனது பத்திரிகையில் மறுபிரசுரம் செய்ததும் குறிப்பிடத்தக்கது. தாம் எடுத்துக்கொண்ட பாத்திரத்தைச் சித்திரத்தில் தத்ரூபமாகக் காட்டும் வல்லமை சிரித்திரனுக்கு இருந்தது. அது கார்ட்டூன் ஓவிய உலகில் சிரித்திரனுக்கேயுரிய தனிப்பண்பு.

''வேலி படர்ந்த மணமேலே
ஹெலி பறக்குது மானே
காற்றாடி சுழல்வதனாலே
தென்றல் வீசும் தானே''

இது ஒரு புதிய கவிதை. யாழ்ப்பாணத்தில் 'ஹெலி' களின் வருகையைத் தொடர்ந்து நகைச்சுவையாகப் புலவர் பெருமான் பாடிய கவிதை இது. இக்கவிதையின் நகைச்சுவை மொழியியலின் வடிவத்தையே குறிக்கின்றது.

மொழியியலில் உயர் நடை, இழிசனர் நடை என இரு பகுதிகள் உண்டு. பெர்னாட்சா தனது நாடகத்தில் தாழ்ந்த குடியில் பிறந்த நங்கையொருத்தியை அழகான ஆங்கிலம் பேசிப் பழக்கி உயர்குடியில் சேர்த்துவிடுகின்றார். ஒரு மொழியின் பேசப்படும் தன்மை அம்மொழி பேசுவோரின் குடியியல் தன்மையை விளக்கிநிற்கும். நாம் தமிழர் என வாழ்ந்தும் எம்மில் சிலர் தமிழை

பல்கலை ஆய்வாளர்

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

விளங்கமுடியாது ஆங்கிலத்தின் ஆதிக்கத்தில் தமிழ்க்கலாசாரத்தை மறந்து கொழும்பில் வாழ்ந்தனர். அவர்களை இனம் காட்டுவதாகச் சிரித்திரன் ஆரம்பித்த மிசிஸ்டாமோடிரன் என்ற பகுதி அமைந்தது. ''வட் இஸ் தமிழச்சங்கம்'' எனக் கேட்கும் மிசிஸ் டாமோடிரனுக்கு மிஸ்டர் டாமோடிரன் ''அது நம்மநாட்டு கூட்டுறவுச் சங்கம்போல ஒன்று'' எனப் பதிலளித்தார். இந் நகைச்சுவைகள் மொழியியலுடன் கலாசாரம் கலந்தமையால் மாபெரும் வெற்றியை ஈட்டிக் கொண்டது.

மொழியியலின் கடைசி ஆயுதமாக மகுடியைச் ''சிரித்திரன்'' பயன்படுத்தியது. அது நகைச்சுவையை மாத்திரம் அன்றி மொழியியலின் ஊடாகச் சீர் திருத்தத்தையும் புகுத்தியது. வாழ்க்கை என்றால் என்ன என ஒருவர் கேட்கின்றார். அதற்கு மகுடி ''இன்னலும் கன்னலும் சேர்ந்த பின்னலாகிய மின்னல்'' எனப் பதிலளித்து மொழியியலிலும் தனது புலமையை எடுத்துக் காட்டினார்.

ஆயினும் இவை எழுதப்பட்ட காலத்தில் அத்தகைய கோட்பாடு ஒன்றின் கீழ் இயங்குவதாகச் ''சிரித்திரன்'' நினைக்கவில்லை. இவை ஆராய்ச்சி என்ற உலைக்களத்தில் இட்டபோது இவை எமக்குக் கிடைத்த தரவுகளே! நல்ல ஒரு விமர்சகரான புலோலியூர் திரு. சதாசிவம் அவர்கள் கூறியுள்ள சில கருத்துக்கள் இங்கே நினைவு கூரத்தக்கன.

''கலைகளில் பண்பு பணியாற்றிய நுட்பங்களைக் கற்காமலேயே கலைஞர்கள் கலைகளைப் படைப்பதையும் சாதாரண மக்கள் அவற்றைச் சுவைப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம் இதுவே கலையின் தனிச் சிறப்பு. கலைகள் யாவும் மனித அனுபவங்களின் தொகுப்பு வாழ்வியலின் வெளிப்பாடு''

## தற்பாதுகாப்பு அணுகுமுறை

நகைச்சுவையில் மறைமுகமான தற்பாதுகாப்பு முறை ஒன்று உள்ளது. ஒருவர் இன்னொருவரைப் பார்த்து ''அண்ணை தங்கராசன் சொல்கின்றான் நீங்கள் கள்ளன்'' என்று கூறுகின்றார் என வைத்துக்கொள்வோம். இங்கு கூறியவரின் கூற்றில் தங்கராசா ஒரு தற்பாதுகாப்புக் கேடயமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த மறைமுகத் தற்பாதுகாப்பு முறைகளின் ஊடாகச் சமுதாயம் சீரழிவதை 'சிரித்திரன்'' அவதானித்தது. இதனால் அந்தத் தற்பாதுகாப்புக் கேடயத்தையும் அது சமுதாயச் சீர்திருத்தத்துக்காகவும் பயன்படுத்தியது. ஒரு பணக்காரி தனது பிள்ளைகளில் ஒருத்தியைப் பார்த்துச் சொல்கின்றாள். ''ஸ்கூல்... ஸ்கூல் என்று செல்கின்றாயே ஒன்றும் படித்ததாகத் தெரியவில்லையே'' மகள் கூறுகின்றாள் ''நீங்கள் ஷொப்பிங், என்று ஓடுகின்றீர்களே ஷொப்பிங் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லையே''

ஒரு பால் வியாபாரி இன்னொரு வியாபாரியைப் பார்த்துக்கேட்கின்றான் உமது பாலில் தண்ணீர் கலந்து இருந்ததே என்று! அதற்கு மற்றவன் கூறுகின்றான் ''நான் கடவுளிற்குக் கொடுக்கும் பாலில் மாத்திரம்தான் தண்ணீர் கலப்பேன்'' தற்பாதுகாப்பு முறை இந்த நகைச்சுவையில் கடவுளையே ஏமாற்றும் முறைக்கே மாறிவிட்டதை அவதானிக்கலாம்.

**சிரித்திரு**

□ -: ஏன் டொக்டர் வீட்டுக் கோழி கூவவில்லை?

○ :- நித்திரைக் குளிசை விழுங்கி இருக்க வேணும்.

மகுடியும் தனது பதில்களில் இந்தத் தற்பாதுகாப்பு முறைகளை நன்கு பயன்படுத்தியுள்ளார். மனிதன் என்ன செய்கின்றான் எனக் கேட்ட கேள்விக்கு அவன் கொட்டாவிவிட்டு காற்றை அசுத்தப்படுத்துகின்றான் என நகைச்சுவையாகக் கூறினார். இங்கு மனிதன் எனப் பொதுப்படையாகக் கூறி மனிதனிடமிருந்து மகுடியார் தப்பிவிட்டார். ஆண்களின் பலவீனம் எது எனக்கேட்கப்பட்ட போது மனைவி விட்டு மனைவி தாவல் என்றார். இப்படிப் பல.

### மனவேறுபாட்டு நகை அதிர்வு

ஒரு மனிதன் தனது இயல்பான குணநலன்களில் இருந்து பிறழும்போது நகைச்சுவை பிறக்கும். மனமாற்றம், மதமாற்றம், குணமாற்றம் என்பன நகைச்சுவை வடிவிற்குக் கைகொடுக்கும். கம்பராமாயாணத்தில் இராமன் முடிசூடும் செய்தியைக் கைகேயிக்கு முதலில் அறிவித்தவள் கூனி இந்த சந்தோஷமான செய்தியை அறிவித்ததிற்காகக் கைகேகி தனது முத்துமாலையைக் கழற்றிக் கூனியின் கழுத்தில் போடுகின்றாள், ஆனால் கூனியோ இவளின் கருத்தை ஏற்காது கைகேகியின் மனத்தை மாசுபடுத்திவிடுகின்றாள். அதன்பின்பே பரதன் நாடாளவும், இராமன் காடேகவும், தசரதன் உயிர்பிரியவும் காரணிகள் பிறக்கின்றன. எனவே உலகில் கொடும்விஷங்களில் ஒன்றான மனவேறுபாட்டை நகைச்சுவை தனது வடிவமாக ஏற்கலாம். சிரித்திரனில் என்னால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்த நகைச்சுவை ஒன்று இவ்வாறே பின்னப்பட்டது.

★ ஒருவர்: உங்கள் மகளை முறைமச்சானுக்கு கல்யாணம் செய்து கொடுக்கப் போகின்றீர்களாமே?

பெண்ணின் தந்தை:- அந்தக் காவாலிக்கு எனது மகளைக் கொடுப்பேனோ?

ஒருவர்:- அவருக்குச் சுவிப்பில் முதல்பரிசு விழுந்திருக்கே?

பெண்ணின் தந்தை: என்ன இருந்தாலும் அவன் முறைமச்சான்.

சிரித்திரன் ஆசிரியர் கீறிய சவாரித்தம்பர் பகுதியிலும் குடும்ப நகைச்சுவை ஊடாக இநத மனமாற்ற அதிர்வுகள் வருகின்றன. சின்னக்குட்டி ஆமியில் வேலை செய்யும் ஒரு ஆணை மணமகனாக ஒரு பெண்ணுக்குத் திருமணம்செய்வித்தார். அப்பெண்ணின் தாய்


மாட்டு வண்டி அச்சாணி உற்பத்தியாளர்கள்
வளையம் - கடையாணி
மற்றும் இரும்பு வேலைகள்

''ஆணித்தரமான அச்சாணி
உற்பத்திக்கு ..........''

''சூரியவின்பநாதன்
இரும்புத் தொழிலகம்!''



க. சூரியவின்பநாதன்
இரும்புத் தொழிலகம்
காளிகோவிலடி - மூளாய்

'ஆமி' எனத்தெரியவந்ததும் ஒப்பாரிவைப்பதும், பின்பு அந்த ஆமி மாப்பிளைக்கு அறுபது ரூபாய் சம்பளம் என அறிந்ததும் அவள் அமைதியடைந்து விடுகின்றாள். இக்கார்ட்டூன் 60 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

(மகுடியும் இத்தன்மைகளைத் தனது பதில்களில் புகுத்தியுள்ளார். நூல்களின் உள்ளே தேடுக)

## குணவேறுபாட்டு நகைச்சுவைகள்

மனவேறுபாட்டினைப் பார்த்தோம். குணவேறு பாட்டினை இப்போது பார்ப்போம். உடலும், உள்ளமும் நலம்தானா எனக் கண்ணதாசன் ஒரு பாடலிலே பாடுகின்றார். உடலும், உள்ளமும் வேறு. உடல் வேறுபட்டால் உள்ளம் வேறுபடும். உள்ளம் வேறுபடின் மனம் வேறுபடும். மனம் வேறுபடின் முற்றாகக் குணமும் வேறுபடும். இதனைத் தெளிவாக வாசகர்கள் உணரவேண்டும். கைகேயியின் மனம் வேறுபட்டது கூனியால்! ஆனால் அவளின் குணம் அப்படிப்பட்டது அல்ல. நிலையான குணத்தை மனவேறுபாடு மூலம் மாற்றலாம் என்ற கொள்கை மூலம் மாற்றியவள் கூனி.

உலகத்தின் கொடுமைகட்கு எல்லாம் மூலகாரணமானது குணவேறுபாடு. செம்மீன் என்ற மலையாளப்படம் பார்த்தபோது அந்தக்கதையின் பிரதான பாத்திரம் ஒன்று ஏழையாக இருந்தபோதும் பின்பு வள்ளம், வலை, பணம் எனப்புரள இரண்டாந்தாரம் தேடிப் பிடித்தபோது அவனிடம் கண்ட வேறுபாட்டைத் தகழி சிவகங்கரம்பிள்ளை எழுதியதைவிடப் படத்தில் காட்டியபோது குணவேறுபாடு இயற்கையாகப் பிரதிபலித்தது. வட்டிக்குப் பணம் கொடுத்த ஷைலொக்கின் கதை குணவேறுபாட்டின் உச்சக்கட்டத்தை உலகத்திற்கு வெளிக்கொணர்ந்து காட்டும் அழகான கட்டம்!

குணவேறுபாட்டு நகைச்சுவைகளை ஆங்கில ஆர்ட்டிஸ்டுகளைவிடப் பேசாத சித்திரங்களாக வரைந்து காட்டி ஒரு புதுமையை வரவழைத்த சிரித்திரன் சிவஞானசுந்தரம் ஆயிரக்கணக்கான வாசகர்களைச் சிரிக்க வைத்துள்ளார். அந்த முறையைப் பின்பற்றுவது சற்றுக் கஷ்டமானது. ஏனெனில் அந்தச் சிரிப்புச் சிந்தனைகள் தத்துவத்துடன் கலந்தவை. உள்ளத்தில் உண்மை ஒளி இல்லாதுவிடின் அத்தகைய சித்திரங்களைத் தீட்டுவது கஸ்டமானது. அவர் வரைந்த பேசாத சித்திரங்கள் பொதுமக்களுடன் பேசுவதைப் பார்ப்போம்.

ஒரு குடும்பம் அங்கு பிள்ளைகள் இருவர். கணவனுக்கும் - மனைவிக்கும் கருத்தில் மாறுபாடும் வேறுபாடும் உண்டாகின்றது. பிள்ளைகள் தாய்பக்கம் பின்னால் நிற்கின்றார்கள். அப்போது தாய் கையினைக்காட்டி உரத்துக் கதைப்பது சித்திரத்தில் தீட்டப்பட்டது. பின்பு தாயின் குணவேறுபாட்டால் பிள்ளைகள் தகப்பன் பக்கத்தில் நிற்கின்றார்கள். அப்போது தாய் தலைகுனிந்து நிற்கத் தகப்பன் உரத்துப் பேசுவது காட்டப்பட்டுள்ளது.

இன்னொரு கார்ட்டூன். அந்தக் கார்ட்டூனில் ஒரு மதிப்புள்ள கனவானுக்கு அருகில் ஒரு 'றவுடி' நாணிக்கோணி நிற்கின்றான். அவரின் நட்புக்கிடைத்ததே பெரும் பாக்கியம் என அவர் நினைத்திருக்கக் கூடும். அடுத்த கார்ட்டூனில் அந்த 'றவுடி' மரியாதை மிகுந்த கனவானின் கையைத் தொட்டுப்பார்க்கின்றான். மூன்றாவது கார்ட்டூனில் அந்த 'றவுடி மரியாதை மிகுந்த அந்தக் கனவானின் தோளிலே கைபோடுகின்றான். நாலாவது கார்ட்டூனில் அந்த மரியாதை மிகுந்த கனவானுக்குக் கன்னத்தில் அடிக்கின்றான். 'றவுடி' 'பழகப் பழக" என இக் கார்ட்டூனுக்குத்தலைப்பிட்ட சிரித்திரன் சி சிவஞானசுந்தரம் அவர்கள் இந்தக் கார்ட்டூன் மூலம் மிக உயர்ந்து நிற்கின்றார். அமெரிக்காவில் இருந்து வந்த சிரிப்புச் சஞ்சிகை ஆசிரியர்களுக்கு இக்கார்ட்டூனைக் காட்டியபோது இதனை வரைந்தவர் அமெரிக்காவில் இருந்தால் ஒரே நாளில் பணக்காரராகிவிடுவார் என்றார். குணவேறுபாடு பற்றி எடுத்துக் காட்டுவதற்காக மேற்படி நகைச்சுவை கார்ட்டூனை சிரித்திரன் ஆசிரியர் கீறினாரா என்பதுபற்றி எமக்கு தெளிவில்லை. ஆயினும் எமது வகைப்படுத்தலின்போது அது தானாகவே இடம் பிடித்துக்கொண்டது. குணவேறுபாடு நகைச்சுவைகள் மகுடியில் நிறைய உண்டு. கணவன் விடும் தவறுகள் கட்டிய தாலி நாகபாம்பு போல் தவழும் மனோநிலையை மனைவிக்கு உண்டாக்கும் என மகுடி ஒரு முறை எழுதியுள்ளார். இவையும் இவைபோன்றனவற்றையும் மகுடியில் நீங்கள் கண்டு மகிழலாம். ○

நன்றி:- வாழ்க்கை

---

**சிரித்திரு**

☐ :- ஏன் பெண்களை வெளிநாட்டு மாப்பிள்ளைக்குக் கட்டிக்கொடுக்கின்றார்கள்?

○ :- இப்போ கோழி மேய்க்கிலும் வெளிநாட்டிலை மேய்க்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள்.

# 'AMBAL'



"உங்க கல்யாணத்துக்கு எந்த ஆலையில அரிசி வாங்கினீங்க?"

"வேறை எங்கெ? தரமான, நாணயமான அம்பாள் அரிசி ஆலையிலதான்!"

## அம்பாள் அரிசி ஆலை

**தும்பளை வீதி - பருத்தித்துறை**

# நான்கு பஞ்சு வியாபாரிகள்

ஒரு ஊரில் நான்கு பஞ்சு வியாபாரிகள் இருந்தார்கள். அவர்கள் தங்கள் கிட்டங்கியில் போட்டு வைத்திருக்கும் பஞ்சுப் போராக்களை எலி கடித்து நாசமாக்கி விடாமலிருப்பதற்காக பூனை ஒன்றை வளர்த்து வந்தார்கள். அந்தப் பூனையின்மேல் நான்கு பேருக்குமே அபாரப் பிரியம். அந்தப் பூனையின் நான்கு கால்களையும் ஆளுக்கொரு காலாகப் பகிர்ந்துகொண்டார்கள். அதாவது ஒவ்வொரு காலும் ஒவ்வொருவருக்குச் சொந்தமாம்! பூனையின் மேல் இப்படி அத்தியந்தப் பிரியம் அவர்களுக்கு.

ஒருநாள் பூனையின் ஒரு காலில் ஒரு காயம் ஏற்பட்டுவிட்டது. அந்தக் காயத்தை ஆற்றுவதற்காக அந்தக் காலின் 'சொந்தக்காரன்' ஒரு துணியை எண்ணெயில் நனைத்து சுற்றி வைத்துக் கட்டினான். பூனை நொண்டிக் கொண்டே ஓடிவிட்டது. அப்பால் சென்ற பூனை சந்தர்ப்பவசமாக அடுப்பங்கரைப் பக்கமாகச் சென்றது. எப்படியோ அதன் காலில் சுற்றியிருந்த எண்ணெய்த் துணியில் தீப்பிடித்துக் கொண்டது. நெருப்புச் சுடுவதைத் தாங்கமாட்டாமல், பூனை பக்கத்திலுள்ள பஞ்சுக்கிடங்குக்குள் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தது. இதனால் அங்கிருந்த பஞ்சு மூடைகள் தீப்பிடித்து விட்டது. அணைப்பதற்கு முடியாதபடி தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

அவ்வளவு பஞ்சும் எரிந்து நாசமாகிவிட்டது. இனி என்ன செய்வது? காலின் சொந்தக்காரன் மீது மற்ற மூன்று வியாபாரிகளும் வழக்குத் தொடுத்தார்கள். நீதி மன்றத்தில் நீதிபதியிடம் மூவரும் பின்வருமாறு முறையிட்டார்கள்;

''அந்த வியாபாரி தனக்குச் சொந்தமான பூனைக்காலில் எண்ணெய்த்துணியைச் சுற்றி வைத்திராவிட்டால், அதில் தீப்பிடித்திருக்காது. அதில் தீப்பிடிக்கவில்லையென்றால் பஞ்சும் நாசமாகியிராது. அவன் எண்ணெய்த் துணியைப் பூனையின் காலில் சுற்றியதனால்தான் பஞ்செல்லாம் நாசமாகிவிட்டது. அதனால், அவன் எங்களுக்கு நஸ்டஈடு கொடுக்க வேண்டும்.''

நீதிபதியாக இருந்தவன் மரியாதைராமன். இந்த விசித்திரமான வழக்கில் தீர்ப்புச் சொல்ல அவனைவிட வேறு எந்த நீதிபதியால் முடியும்? பின்கண்டவாறு தீர்ப்பளித்தான் மரியாதை ராமன்;

''எண்ணெய்த் துணியைச் சுற்றி வைத்த வியாபாரிக்குத்தான் நீங்கள் மூவரும் நஸ்டஈடு கொடுக்கவேண்டும். அவன் எந்தக் காலில் துணியைச் சுற்றி வைத்தானோ, அந்தக் காலில் காயமிருந்தது. காயமிருக்கும் காலை ஊன்றி பூனையால் நடக்கமுடியாது. அதனால், அது காயப்பட்ட காலை மேலே தூக்கிக்கொண்டு மற்ற மூன்று கால்களாலும்தான் நடந்திருக்க வேண்டும். அதாவது, உங்கள் மூவருக்கும் சொந்தமான கால்களால்தான் நடந்திருக்க வேண்டும். அது நடந்து செல்லப் போய்த்தான் துணியில் தீப்பிடித்து - பிறகு பஞ்சிலும் தீப்பிடித்தது. அதனால் மொத்தப்பஞ்சின் மதிப்புத் தொகையில் நானில் ஒரு பங்கை நொண்டிக்காலின் சொந்தக்காரனுக்குக் கொடுத்து விடுங்கள். ஏனென்றால் அவனுடைய பங்கைச் சேர்ந்த பஞ்சு நாசமாகிவிட்டது அல்லவா?'' □


# பொய்ச் சாட்சிகள்

ஒருவன் காசிக்குப் போய் வரவேண்டும் என்று புறப்பட்டான். போவதற்கு முன் தன் நண்பனாகிய ஒரு வியாபாரியிடம் தன்னிடமிருந்த விலை உயர்ந்த வைரத்தைக் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கும்படியாகச் சொல்லி, காசியாத்திரை செய்துவிட்டுத் திரும்பி வரும்போது தன்னிடம் அதைத் திரும்பத் தரவேண்டும் என்றும் கூறினான். வியாபாரியும் சம்மதித்து வைரத்தை வாங்கிக்கொண்டான்.

அவன், காசியாத்திரை செய்துவிட்டுத் திரும்பி வந்தான். வந்து வைரத்தைக் கேட்டான்

''மூன்றுபேர் முன்னிலையில் உனக்கு நான் திருப்பித்தந்துவிட்டேனே!'' என்று கையை விரித்தான் வியாபாரி. வியாபாரியின் மோசடியைக் கண்டு வருந்தி மரியாதைராமனிடம் போய் எல்லா விபரங்களையும் சொன்னான் - காசியாத்திரை செய்தவன். வியாபாரியோ மூன்று பேருக்கு லஞ்சம் கொடுத்து பொய்ச்சாட்சிகளைத் தயார் செய்து அழைத்துக்கொண்டு நீதிஸ்தலத்தில் ஆஜரானான். தான் வைரத்தைத் திருப்பிக்கொடுத்ததுக்கு அந்த மூன்றுபேரே சாட்சிகள் என்றான் வியாபாரி. மரியாதைராமன் சாட்சிகளைப் பார்த்து; ''சொந்தக்காரனிடம்

(21ஆம் பக்கம் பார்க்க)




"உங்க உணவு விடுதிக்கு சோமசுந்தரம் ஆலையில அரிசி வாங்குங்க. அதிர்ஷ்டம் தேடி வரும். பிறகு வியாபாரம் ஓஹோ எண்டு நடக்குதா இல்லையா பாருங்க!"

# சோமசுந்தரம் அரிசி ஆலை

விநாயகம் முதலியார் வீதி,

**பருத்தித்துறை**

## அருமருந்து

கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன் நோயுற்றிருந்த கடைசிக் காலத்தில் அவரைப் பார்க்கச் சென்ற நண்பரொருவர் டாக்டர் கொடுத்துவரும் மருந்திற்கு அவரது உடலில் சுகம் ஏற்படுகிறதா என்பதுபற்றி விசாரித்தார்.

அதற்கு கலைவாணர் ''இதனால்கூட என்னைச் சுகப்படுத்த முடியவில்லையே, டாக்டரின் மருந்து எங்கே சுகப்படுத்தப்போகிறது?'' என்றார்.

கலைவாணர் 'இதனால்' என்று சுட்டிக்காட்டியது அவரின பக்கத்தில் கிராமபோனில் கிடந்த, ரி. என். இராஜரத்தினம்பிள்ளையின் நாதஸ்வர இசைத்தட்டு.

ஆதாரம்: சுப்பு ஆறுமுகம் எழுதிய கலைவாணர் என். எஸ். கே. நூல்

[19ஆம் பக்கத் தொடர்ச்சி]

வியாபாரி வைரத்தைத் திருப்பிக் கொடுத்தது உண்மைதானா?'' என்று கேட்டான்.

''உண்மைதான்'' என்று மூவரும் ஒரே குரலில் பதில் சொன்னார்கள்.

உடனே மரியாதைராமன் சேவகனைப் பார்த்துக் கொஞ்சம் களிமண் கொண்டுவரும்படி உத்தரவிட்டான் சேவகன் களிமண் கொண்டு வந்ததும் மரியாதைராமன் மூன்று சாட்சிகளையும் பக்கத்தில் வரவழைத்து '' நீங்கள் மூன்று பேரும் ஆளுக்குக் கொஞ்சம் களிமண்ணை எடுத்துக் கொள்ளுங்கள். வியாபாரி திருப்பிக் கொடுத்த வைரம் எவ்வளவு பருமனோ அவ்வளவு பருமனில் இந்தக் களிமண்ணால் ஒரு உருண்டை செய்யுங்கள்'' என்று கூறி, மூன்று பேரையும் தனித்தனி அறையில் கொண்டுபோய் அடைத்துவிட்டான். சிறிது நேரம் கழித்து மூன்று பேரையும் திருப்பி அழைத்தான்; அவரவருடைய களிமண் உருண்டையைக் காட்டும்படி சொன்னான். மூன்று பேருடைய உருண்டைகளும் வேறு வேறு வடிவத்தில் வேறுவேறு அளவில் வித்தியாசப்பட்டு இருந்தன. உண்மையில் அந்த வைரத்தை இந்த மூன்று பேரும் பார்க்காததால்தான், தங்கள் மனக்கற்பனைக்குத் தோன்றியவாறு களிமண்ணைத் திரட்டியிருக்கிறார்கள். அதனால் மூவரும் பொய்ச்சாட்சிகள் என்று அறிந்து வைரத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி வியாபாரிக்கு உத்தரவிட்டான் மரியாதைராமன். ☐

நன்றி: தீபம்

## குறுமணி

### உண் மெய்

வந்திருப்பவர் உள்ளார்ந்த நண்பர் போலும். கடைக்காரர் மனம்விட்டுப் பேசினார். படியேறும்போது சாடைமாடையாய் விழுந்தது. ''...சரிதான் பாருங்கோ, ஆனாலும், யாவாரத்துக்குப் பணம் ரண்டாவது மூலதனந்தான். பொய்தான் முதலாவது. தவிர்க்கேலாது!'' வந்தவரும் பலமாய் ஆமோதித்தார். கடையுள் நுழைய, ஏதேச்சையாய்ப் பட்டது சாமிப்படத் தட்டு. முதலாளியின் தலைமேல், வரிசையாய்ச் சுவாமிகள். 'உண்மை பேசி உத்தமனாக வாழ்' வாசகத்துடன் காந்தியும்!

மையோன்

### குருவும் சீடனும்


சீடன்: தேவரீர்! சுற்றாடல் மாநாடு பற்றி உங்கள் கருத்து யாதோ?

குருதேவர்: நன்று. நன்று அதையும் ஆதரிக்கிறேன்... ஆனால் உள்ளம் மாசுபடாதிருக்க ஒரு மாநாடு தேவை.

சீடன்: அதற்குத்தான் மதம் இருக்கிறதே குருதேவா.

குருதேவர்: மதங்கள் இன்று அணு உலைக்கு நெருப்பு மூட்டிக்கொண்டு இருக்கின்றனவே.

## சிரித்திரன் சிக்கல் IV இன் வெற்றிபெற்ற விடை




ஏராளமான விடைகள் வந்தபோதிலும் ஆசிரியரின் விடைக்கு ஒத்ததாக ஒரு விடையுமே கிடைக்கவில்லை. எனவே குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 10 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 50/= வீதம் வழங்கப்படுகிறது.

பரிசில்களை வழங்குவோர் பிள்ளையார் அரிசி ஆலை (மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய், கரவெட்டி) ஸ்தாபனத்தினர்.

தை, மாசி சிரித்திரன் சிக்கல் போட்டியில் தேர்வு பெற்ற அதிர்ஷ்டசாலிகளில் இதுவரை பரிசினைப் பெற்றுக் கொள்ளாதோரும் சிக்கல் போட்டி - IV இல் தேர்வு பெற்றோரும் சிரித்திரன் காரியாலயத்தில் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ளவும்.

### பரிசில்கள் பெறுவோர்.

1. **அ. கிருபாகரன்**
பிரதான வீதி, தொண்டமனாறு.

2. **ப. மஞ்சுளா**
**க. கந்தசாமி**
லெப். முத்து வீதி, மானிப்பாய்.

3. **திரு. செ. மெ. மயில்**
வேலணை கல்விக்கோட்டம்,
57, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

4. **இ. புவனேந்திரன் (அப்பன்)**
C/o **இ. கனகசபை**
பிரமந்தனாறு, விஸ்வமடு.

5. **சீ. கஜவதனி**
25/12 செம்மணி ஒழுங்கை,
(சண்முகம் வீதி),
அரியாலை.

6. **கா. றெஜிந்தன்**
435, சங்கீதா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

7. **குமுதினி தவராஜா**
ஆயத்தடி, மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

8. **ம. அ. புனிதராஜா**
கரை. தெ ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி.

9. **சி. ஸ்ரீஜீவா**
"ஸ்ரீமுருகன்ஸ்"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

10. **ச. சிவபாலன்**
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.





"ஏனப்பா தலையெப் பிடிக்கிறாய்? என்ன மருந்து வேணும்? நேரா சுந்தரம் அன் சன்சுக்குப் போ!"

★ மருந்துப் பொருட்கள்.
★ சாய்ப்பு சாமான்கள்.
★ பலசரக்கு சாமான்கள்.

# சுந்தரம் அன்சன்ஸ்

கே. கே. எஸ். வீதி — சுன்னாகம்.

இங்கே வெட்டுக



இங்கே வெட்டுக

# சிரித்திரன்
# சிக்கல் V

பங்குபற்றுபவரின் பெயர் ....................................

....................................

முகவரி ....................................

....................................

....................................

வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

இங்கே வெட்டுக

இங்கே வெட்டுக

அறிவுறுத்தல் 1) முடிவு திகதி:- 30-07-93

(2) மேற்காட்டப்பட்ட வரிப்படத்தில் எந்த ஒரு பக்கத்திலும் உள்ள அறுகோணங்களில் (4) இடப்படும் எண்களின் கூட்டுத்தொகை எப்பொழுதும் 26 ஆக இருத்தல் வேண்டும்.

(3) எண்களை 1இலிருந்து தொடங்குக. ஓர் எண் ஒரு முறை மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டும்.

(4) ஆசிரியரின் விடையுடன் ஒத்த முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தெரிவு செய்யப்படும் விடைகளுக்கு முதலாம், இரண்டாம் பரிசுகள் வழங்கப்படும்.

இதுதவிர ஆசிரியரின் விடையோடு ஒத்த மேலும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஐவருக்குத் தலா 50/- வழங்கப்படும்.

முதலாம் பரிசு - 150/- இரண்டாம் பரிசு - 100/-

விதிகள்:

(i) போட்டிப்பத்திரங்கள் முடிவுத் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ வந்து சேரத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும். காலதாமதமாயின் நிராகரிக்கப்படும்.

(ii) விடைகள் யாவும் சிரித்திரனில் பிரசுரிக்கப்பட்ட போட்டிப் படிவத்திலேயே செய்யப்படல் வேண்டும். அவ்வாறில்லையேல நிராகரிக்கப்படும்.

(iii) அனுப்பவேண்டிய முகவரி:- சிரித்திரன் 550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தபால் உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "சிரித்திரன் சிக்கல் போட்டி v" எனக்குறிக்கப்படல் வேண்டும்.


(iv) பரிசில்கள் பெறுபவர்கள் 550, காங்கேசன்துறை வீதியிலுள்ள சிரித்திரன் காரியாலயத்தில் வந்து தமது பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

சிக்கல் - v இற்குரிய பரிசினை அருச்சுனா அரிசி ஆலை (அரசடி வீதி, கரவெட்டி) ஸ்தாபனத்தினர் வழங்குவார்கள்.

(v) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது இது தொடர்பாகக் கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதுவித தொடர்புற் அனுமதிக்கப்படமாட்டாது.

"வாசகர்களின் சிந்தனையைத் தீட்டுவதே சிரித்திரனின் அபிலாஷை"

# பின் சிரிப்பு



பெண்: சாத்திரியார்...... பிள்ளைக்கு மாப்பிள்ளை எந்த திசையில் இருக்கிறார் என்று சொல்லுங்க பார்க்கலாம்.

சாத்திரியார்; மாப்பிள்ளை இருக்கும் திசைமானி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஒருவர்: உங்களுக்கு நான் ஒரு கைக்கடிகாரம் அன்பளிப்புச் செய்யப் போறன்.

மர்றவர்: கூட்டங்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு ஆரம்பிக்கும் பழக்கும் வந்தபின்தான் கடிகாரம் கட்டிக் கொள்வேன்.

ஒருவர் உங்களுடைய பேரை கின்னஸ் புத்தகத்திற்கு எழுதிப் போடப் போறன்.

மற்றவர்: ! ! ! ?

ஒருவர்: நீங்கதான் கிளாலியால் பல தடவை போய் சாதனை புரிந்தனீங்கள்.

''என்னுடைய மனைவி ஒரு சீதையப்பா!

''குடுத்துவெச்ச ராமன் நீ''

''அந்த ராமன், சீதை கண்ணாலை கண்ட மாயமானைத் தேடி காடெல்லாம் அலைஞ்சான். நான், இவள் கனவிலை கண்ட பிளவுஸ் துணியைத் தேடி கடையெல்லாம் அலையிறன்!''

''மண்ணின் மைந்தன் என்ற உனது நாடகத்தை ஏன் அவசர அவசரமாக மேடையேற்ற நிற்கிறாய்?''

''அந்நியநாட்டில் வேலை கிடைத்திட்டுது. விசா கெதியா வந்திடும்.''

''என் அப்பா செத்துப் போகும் காலத்தில் ஒரு லட்சம் விட்டு விட்டுப் போனவர்.''

''நீ கொடுத்து வைத்தவன்!''

''போடா மண்டு! ஒரு லட்சம் கவிதை விட்டிட்டுப் போனவர்!''



○ ''உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் வாங்குறதுக்கு.

உழவு யந்திரங்கள் திருத்துறதுக்கு,

லேத் வேலையளுக்கு

நம்பிக்கையான, நாணயமான இடம் ஒன்றே ஒன்றுதான் . . . . ''

○ ''தெரியும் எம். எவ். றைக்ரர் எஞ்சினியர்ஸ் தானே?''

# எம். எவ். [F] றைக்ரர் எஞ்ஜினியர்ஸ்

**கன்னாதிட்டி வீதி — யாழ்ப்பாணம்.**

---

○ தூய்மை ○ நம்பிக்கை

○ நிதானம்.

**தரமான அரிசி விற்பனையாளர்**

# அருச்சுனா அரிசி ஆலை

அரசடி வீதி, கரவெட்டி.

நிருபர்:- "தங்கள் ஆலையின் இந்தப் பிரமிக்கத்தக்க வளர்ச்சிக்குக் காரணம் ?"

நிர்வாகி:- "எப்போதும் நாங்கள் தரத்தைப் பேணுவதில் கண்டிப்பாகவும், விலையில் நிதானமாகவும் இருக்கிறோம்."

RUBY

# றூபி அரிசி ஆலை

வதிரிச்சந்தி, நெல்லியடி, கரவெட்டி.

RUBY



மாறன் பதிப்பகம், 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.